සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

**21 T I**

පැය දෙකයි
**இரண்டு மணித்தியாலம்**
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து** நிற்கும் **இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பொருளாதார வளங்களை இலகுவாக இரு பிரதான வகுதிகளுக்குள் உள்ளடக்க முடிவது
(1) மூலதன வளங்களும் இயற்கை வளங்களும் என்றாகும்.
(2) நிலமும் மூலதனமும் என்றாகும்.
(3) இயற்கை வளங்களும் மனித வளங்களும் என்றாகும்.
(4) சொத்து வளங்களும் மனித வளங்களும் என்றாகும்.
(5) உழைப்பும் முயற்சியாண்மையும் என்றாகும்.

**2.** பொருளியலில் விளக்கப்படுவதுபோல் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு யாது?
(1) தேவைகள் உயிர்வாழ அத்தியாவசியமான அதேவேளை விருப்பங்கள் வெறும் ஆசைகள் மட்டுமேயாகும்.
(2) விருப்பங்கள் உயிர்வாழ அத்தியாவசியமான அதேவேளை தேவைகள் வெறும் ஆசைகள் மட்டுமேயாகும்.
(3) பொருளியலில் தேவைகளும் விருப்பங்களும் ஒரே கருத்துடையவையாகக் கருதப்படும்.
(4) விருப்பங்களை வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியும் அதேவேளை தேவைகளை வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாது.
(5) தேவைகள் காலப்போக்கில் மாறக்கூடிய அதேவேளை விருப்பங்கள் காலப்போக்கில் மாற்றமடைவதில்லை.

**3.** X மற்றும் Y ஆகிய இரு பொருள்களை மாத்திரம் உற்பத்தி செய்யும் ஒரு குறித்த நாட்டின் உற்பத்தி இயல்தகவு வளையியின் மீதுள்ள மூன்று புள்ளிகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| உற்பத்தி இயல்தகவு | X பொருள் | Y பொருள் |
|---|---|---|
| A | 3 | 0 |
| B | 2 | 3 |
| C | 0 | 9 |

இவ்வுற்பத்தி இயல்தகவுத் தரவுகளின்படி நாம் வரக்கூடிய முடிவு யாதெனில்
(1) இந்த நாட்டின் வளங்கள் ஓரினத் தன்மை வாய்ந்தவை என்பதாகும்.
(2) X பொருளின் 3 அலகுகளையும், Y பொருளின் 9 அலகுகளையும் கொண்ட சேர்க்கையை அடைய முடியும் என்பதாகும்.
(3) X பொருளின் 3 அலகுகளையும், Y பொருளின் 9 அலகுகளையும் கொண்ட சேர்க்கையினை பெற்றுக்கொள்வதற்கு எல்லா வளங்களையும் ஈடுபடுத்தத் தேவையில்லை என்பதாகும்.
(4) Y பொருளின் உற்பத்தி செய்யப்படும் அலகுகளை அதிகரிக்கும்போது X பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு அதிகரிக்கும் என்பதாகும்.
(5) Y பொருளின் உற்பத்தி செய்யப்படும் அலகுகளை அதிகரிக்கும்போது X பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு குறைவடையும் என்பதாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

4. மூலதனம் அரசுடைமையாக இருத்தல், வள ஒதுக்கீடு சந்தை முறைமையில் தங்கியிருத்தல் ஆகிய பண்புகளைக் கொண்டுள்ள பொருளாதார முறைமை எது?
   (1) முதலாளித்துவம் (2) சோசலிசம்
   (3) சமூக சந்தைப் பொருளாதாரம் (4) சோசலிச சந்தைப் பொருளாதாரம்
   (5) கட்டளைப் பொருளாதாரம்

5. பின்வருவனவற்றுள் கேள்வியின் ஒரு நிர்ணயக்காரணி **அல்லாதது** எது?
   (1) பதிலீட்டுப் பொருளின் விலை
   (2) எதிர்வரும் மாதத்தில் குறித்த பொருளின் எதிர்பார்க்கப்படும் விலை
   (3) நிரப்புப் பொருளின் விலை
   (4) குறித்த பொருளை உற்பத்தி செய்யப் பயன்படும் ஒரு உள்ளீட்டின் விலை
   (5) நுகர்வோனின் வருமான மட்டம்


6. ஒரு போட்டிச் சந்தையில் தோடம்பழங்களுக்கான கேள்வி, நிரம்பல் வளையிகள் முறையே பின்வரும் சமன்பாடுகள் மூலம் தரப்படுகின்றன.

$$Q_D = 600 - 5P \qquad Q_S = -240 + 3P$$

இச்சந்தையில் ஒரு தோடம்பழத்தின் விலை 100 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டால் அதன் காரணமாக,
   (1) 40 அலகுகள் மிகைக் கேள்வி நிலவும்.
   (2) 40 அலகுகள் மிகை நிரம்பல் நிலவும்.
   (3) 350 அலகுகள் மிகைக் கேள்வி நிலவும்.
   (4) 350 அலகுகள் மிகை நிரம்பல் நிலவும்.
   (5) சமநிலை விலையும் தொகையும் மாறாதிருக்கும்.

7. கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டுமே ஏககாலத்தில் அதிகரிக்குமாயின்
   (1) சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பன அதிகரிக்கும்.
   (2) சமநிலை விலை வீழ்ச்சியடையும் ஆனால் சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
   (3) சமநிலை விலை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம் ஆனால் சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
   (4) சமநிலை விலை அதிகரிக்கும் ஆனால் சமநிலைத் தொகை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.
   (5) சமநிலை விலை வீழ்ச்சியடையும் அதேவேளை சமநிலைத் தொகை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.

8. தரப்பட்டுள்ள வரைபில் உள்ள இரண்டு நிரம்பல் வளையிகளும் சமாந்தரமானவை. 30 ரூபாவுக்கும் 40 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலை வீச்சினுள்




   (1) $S_1$ வளையியானது $S_2$ வளையியை விட அதிக விலை நெகிழ்வுடையதாகும்.
   (2) $S_2$ வளையியானது $S_1$ வளையியை விட அதிக விலை நெகிழ்வுடையதாகும்.
   (3) $S_1$, $S_2$ ஆகிய இரு வளையிகளும் ஒரே விலை நெகிழ்ச்சியுடையனவாகும்.
   (4) $S_1$ வளையியின் விலை நெகிழ்ச்சிப் பெறுமதிகள் நேர்க்கணியமானவை எனினும் 1 ஐ விடக் குறைவானவையாகும்.
   (5) $S_2$ வளையியின் விலை நெகிழ்ச்சிப் பெறுமதிகள் நேர்க்கணியமானவை எனினும் 1 ஐ விட உயர்வாகும்.

9. ஒரு உற்பத்தி நிறுவனம் அதன் வருவாயை அதிகரிக்க விரும்புவதுடன் அதன் உற்பத்திப் பொருளுக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி $-0.82$ இற்குச் சமமானதெனவும் அறிந்துள்ளது. அவ்வாறாயின் அந்நிறுவனம்,
   (1) விலையைக் குறைக்க வேண்டும்; ஏனெனில் கேள்வி நெகிழ்வுள்ளதாகக் காணப்படுகின்றது.
   (2) விலையைக் குறைக்க வேண்டும்; ஏனெனில் கேள்வி அலகு நெகிழ்ச்சியுடையதாகக் காணப்படுகின்றது.
   (3) விலையைக் குறைக்க வேண்டும்; ஏனெனில் கேள்வி நெகிழ்வற்றதாகக் காணப்படுகின்றது.
   (4) விலையை அதிகரிக்க வேண்டும்; ஏனெனில் கேள்வி நெகிழ்வற்றதாகக் காணப்படுகின்றது.
   (5) விலையை அதிகரிக்க வேண்டும்; ஏனெனில் கேள்வி நெகிழ்வுள்ளதாகக் காணப்படுகின்றது.

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**10.** ஒரு போட்டிச் சந்தையில் பொருளாதார மிகை உச்சப்படுத்தப்படுவது,
(1) நிரம்பல் தொகையானது கேள்வித் தொகைக்குச் சமப்படும் போதாகும்.
(2) நிரம்பல் தொகையானது கேள்வித் தொகையை விடக் கூடுதலாக உள்ள போதாகும்.
(3) கேள்வித் தொகையானது நிரம்பல் தொகையை விடக் கூடுதலாக உள்ள போதாகும்.
(4) சமநிலை விலைக்குக் கீழாக விலை நிர்ணயிக்கப்படும் போதாகும்.
(5) சமநிலை விலைக்கு மேலாக விலை நிர்ணயிக்கப்படும் போதாகும்.

**11.** X பொருளின் கேள்வி நெகிழ்ச்சியானது விலை நெகிழ்வற்றதாகவும், வருமான நெகிழ்வற்றதாகவும் உள்ளது. அதேபோல் X பொருளானது Y பொருளின் பதிலீட்டுப் பொருளாகும். பின்வரும் அட்டவணையிலிருந்து X பொருளை இனங்காண்க.

| | விலைக் கேள்வி நெகிழ்ச்சி | வருமானக் கேள்வி நெகிழ்ச்சி | Y பொருளுடன் குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|---|---|
| (1) | −0.8 | 0.25 | 1.4 |
| (2) | −0.8 | 1.25 | 0.4 |
| (3) | −0.9 | 0.25 | −1.4 |
| (4) | −0.8 | 1.25 | −0.4 |
| (5) | −0.6 | 0.45 | −1.4 |

**12.** ஒரு அரசாங்கம் வினைத்திறனுள்ள குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை நிறைவேற்றுமாயின் அதன் விளைவாக தொழில்வாய்ப்பில் ஏற்படும் மாற்றம் மிகச் சிறியதாக இருப்பது
(1) ஊழியத்தின் கேள்வி சார்பளவில் நெகிழ்வுள்ளதாக இருக்கும் போதாகும்.
(2) ஊழியத்தின் கேள்வி அலகு நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும் போதாகும்.
(3) ஊழியத்தின் கேள்வி சார்பளவில் நெகிழ்வற்றதாக இருக்கும் போதாகும்.
(4) ஊழியத்தின் கேள்வி பூரண நெகிழ்வுள்ளதாக இருக்கும் போதாகும்.
(5) ஊழியத்தின் நிரம்பல் சார்பளவில் நெகிழ்வுள்ளதாக இருக்கும் போதாகும்.

**13.** முட்டைக்கான சந்தைக் கேள்வி வளையியானது $Q_D = 140 - 2P$ ஆகவும் சந்தை நிரம்பல் வளையி $Q_S = -10 + P$ ஆகவும் காணப்படுகின்றது எனக் கொள்க. அரசாங்கம் ஒரு முட்டைக்கான உத்தரவாதத் தளவிலையை 52 ரூபாவாக நிர்ணயிக்கவும், குறை நிரப்புக் கொடுப்பனவொன்றை வழங்கவும் தீர்மானிக்கின்றது எனக் கொள்க. இச்செயற்றிட்டத்திற்காக அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு யாது? (தொகை மில்லியன் அலகுகளில்)
(1) 312 மில்லியன் ரூபா
(2) 126 மில்லியன் ரூபா
(3) 84 மில்லியன் ரூபா
(4) 80 மில்லியன் ரூபா
(5) 06 மில்லியன் ரூபா

**14.** ஒரு அத்தியாவசிய நுகர்வுப் பொருளின் விலையைக் குறைக்கும் பொருட்டு, அரசாங்கம் அப்பொருளுக்கு அலகு மானியம் ஒன்றை வழங்கத் தீர்மானிக்கின்றது. இதன் விளைவாக பொருளின் விலை அதிகளவில் வீழ்ச்சியடைவது,
(1) நிரம்பல் விலை நெகிழ்வுள்ளதாகக் காணப்படும் போதாகும்.
(2) நிரம்பல் விலை நெகிழ்வற்றதாகக் காணப்படும் போதாகும்.
(3) கேள்வி விலை நெகிழ்வுள்ளதாகக் காணப்படும் போதாகும்.
(4) கேள்வி விலை நெகிழ்வற்றதாகக் காணப்படும் போதாகும்.
(5) நிரம்பல் விலை அலகு நெகிழ்ச்சியுள்ளதாகக் காணப்படும் போதாகும்.

**15.** குறுங்காலத்தில், ஒரு நிறைபோட்டி நிறுவனம் எல்லை வருவாய், எல்லை செலவை விடக் கூடுதலாக உள்ள நிலையில் உற்பத்தியை மேற்கொள்கின்றது. குறுங்கால இலாபத்தை உச்சப்படுத்த இந்நிறுவனம் என்ன செய்ய வேண்டும்?
(1) உற்பத்தி செய்யும் தொகையினை அதிகரித்தல்.
(2) உற்பத்தி செய்யும் தொகையினைக் குறைத்தல்.
(3) எல்லைச் செலவை அதிகரித்தல்
(4) கைத்தொழிலை விட்டு விலகுதல்.
(5) உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், அதன்போது MC > MR ஆகும்.

**16.** போட்டிச் சந்தையில் இயங்கும் இலாப உச்சப்படுத்தும் ஒரு நிறுவனம் குறுங்கால நட்டத்தை இழிவுபடுத்த பின்வரும் எந்நிலைமைகளின் கீழ் அத்தியாவசியமாக உற்பத்தியை முடிவுறுத்தும்?
(1) மொத்த வருவாய் மொத்த செலவை விடக் குறைவாக உள்ள போதாகும்.
(2) எல்லைச் செலவு சராசரி மொத்த செலவை விடக் கூடுதலாக உள்ள போதாகும்.
(3) எல்லைச் செலவு எல்லை வருவாயை விடக் குறைவாக உள்ள போதாகும்.
(4) சராசரி வருவாய் சராசரி மாறுஞ் செலவை விடக் குறைவாக உள்ள போதாகும்.
(5) சராசரி வருவாய் சராசரி மொத்த செலவை விடக் குறைவாக உள்ள போதாகும்.

**17.** போட்டிச் சந்தையில் இயங்கும் ஒரு உற்பத்தி நிறுவனம் விற்பனை செய்யும் பல்வேறு வெளியீட்டு மட்டங்களின் மொத்த செலவுகளையும் (TC) இலாபங்களையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| வெளியீடு (அலகுகள்) | மொத்தச் செலவு (ரூபா) | இலாபம் (ரூபா) |
|---|---|---|
| 20 | 600 | 600 |
| 30 | 800 | 700 |
| 40 | 1000 | 800 |

இத்தரவுகளின்படி நிறுவனம் தனது விற்பனையை
(1) 20 அலகுகளிலிருந்து 30 அலகுகளாக அதிகரிக்கும்போது விலை 50 ரூபாவினால் வீழ்ச்சியடையும்.
(2) 20 அலகுகளிலிருந்து 30 அலகுகளாக அதிகரிக்கும்போது விலை 60 ரூபாவினால் வீழ்ச்சியடையும்.
(3) 30 அலகுகளிலிருந்து 40 அலகுகளாக அதிகரிக்கும்போது விலை 40 ரூபாவினால் வீழ்ச்சியடையும்.
(4) 30 அலகுகளிலிருந்து 40 அலகுகளாக அதிகரிக்கும்போது விலை 5 ரூபாவினால் வீழ்ச்சியடையும்.
(5) 20 அலகுகளிலிருந்து 40 அலகுகளாக அதிகரிக்கும்போது விலை 10 ரூபாவினால் வீழ்ச்சியடையும்.

**18.** குறுங்கால செலவுகளுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுகளில் **பிழையானது** எது?
(1) சாரசரி மொத்தச் செலவு மற்றும் சராசரி மாறுஞ் செலவு வளையிகள் U-வடிவம் கொண்டவையாகும்.
(2) சராசரி மொத்தச் செலவு, சராசரி மாறுஞ் செலவு என்பவற்றுக்கிடையிலான இடைவெளி எல்லைச் செலவாகும்.
(3) வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி மொத்தச் செலவு, சராசரி மாறுஞ் செலவு என்பவற்றுக்கிடையிலான இடைவெளி குறுகிச் செல்லும்.
(4) எல்லைச் செலவு வளையியானது சராசரி மாறுஞ் செலவு வளையியை அதன் இழிவுப் புள்ளியில் வெட்டிச் செல்லும்.
(5) எல்லைச் செலவு வளையியானது சராசரி மொத்தச் செலவு வளையியை அதன் இழிவுப் புள்ளியில் வெட்டிச் செல்லும்.

**19.** ஒரு திறந்த பொருளாதார மாதிரியில் (open economy model) மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடக் கூட்டப்படுவது
(1) இறுதி நுகர்வுச் செலவீடு, மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் மற்றும் தேறிய ஏற்றுமதிகள் ஆகும்.
(2) தனியார் நுகர்வுச் செலவீடு, அரசாங்க நுகர்வுச் செலவீடு மற்றும் பொருள்கள், சேவைகளின் ஏற்றுமதிகள் ஆகும்.
(3) இறுதி நுகர்வுச் செலவீடு, மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் மற்றும் தேறிய ஏற்றுமதிகள் ஆகும்.
(4) இறுதி நுகர்வுச் செலவீடு, மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம், கையிருப்பு (inventories) மாற்றங்கள் மற்றும் பொருள்கள், சேவைகளின் ஏற்றுமதிகள் ஆகும்.
(5) தனியார் நுகர்வுச் செலவீடு, மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் மற்றும் தேறிய ஏற்றுமதிகள் ஆகும்.

**20.** மொத்தத் தேசிய சேமிப்பானது பின்வருவனவற்றுள் எதனை செலவிடத்தக்க மொத்தத் தேசிய வருமானத்தில் இருந்து கழிப்பதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது?
(1) வரிகள்
(2) இறுதி நுகர்வுச் செலவீடு
(3) தேறிய ஏற்றுமதிகள்
(4) மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்
(5) மாற்றல் செலுத்தல்கள்

**21.** பின்வரும் கூற்றுகளுள் சரியானது எது?
(1) சூதாட்டத்தின் மூலம் பெறப்படும் சம்பாத்தியங்கள் தேசிய கணக்குகளின் உற்பத்தி வரம்பினுள் உள்ளடக்கப்படும்.
(2) நெடுவாழ்வுடைய மூலதனப் பொருள்களின் நுகர்வானது முதலாந்தர வருமானத்தின் ஒரு கூறு அன்று.
(3) சுயதேவைக்காக வீட்டுத்தோட்டத்தில் மேற்கொள்ளப்படும் காய்கறி உற்பத்தி மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படும்.
(4) அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவச கல்விச் சேவை மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.
(5) கலப்பு வருமானங்கள் எல்லா நிறுவன அலகுகளினாலும் உழைக்கப்படுகின்றன.

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**22.** கடந்த ஆண்டில் ஒரு நாட்டின் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 12 000 பில்லியன் ரூபாவாகவும், இந்த ஆண்டில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 16 500 பில்லியன் ரூபாவாகவும், இந்த ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி 150 ஆகவும் இருப்பதாகக் கொள்க. இந்த நாட்டின் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் யாது?

(1) 37.5% (2) 9.5% (3) – 6.4% (4) – 8.3% (5) – 27.3%

**23.** ஒரு கருதுகோள்ரீதியான பொருளாதாரம் குறித்த பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

சேமிப்புகள் (S) = 500 பில்லியன் ரூபா
பாதீட்டுக் குறைநிலை (BD) = 100 பில்லியன் ரூபா
தேறிய ஏற்றுமதிகள் (NX) = – 50 பில்லியன் ரூபா

இத்தரவுகளின்படி இப்பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம் (I) என்னவாக இருக்க வேண்டும்?

(1) 650 பில்லியன் ரூபா (2) 550 பில்லியன் ரூபா (3) 450 பில்லியன் ரூபா
(4) 400 பில்லியன் ரூபா (5) 350 பில்லியன் ரூபா

**24.** எல்லை நுகர்வு நாட்டம் 0.9 ஆகவுள்ள ஒரு பொருளாதாரத்தைக் கருதுக. அரசாங்கத்தின் மாற்றல்கள் 500 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கப்படுமாயின் இப்பொருளாதாரத்தின் மொத்த வெளியீடு எந்தளவினால் அதிகரிக்கும்?

(1) 450 பில்லியன் ரூபா (2) 500 பில்லியன் ரூபா (3) 3 500 பில்லியன் ரூபா
(4) 4 500 பில்லியன் ரூபா (5) 5 000 பில்லியன் ரூபா

**25.** கருதுகோள்ரீதியான பொருளாதாரத்தில் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 10 000 பில்லியன் ரூபாவாகவும் நிறை தொழில்மட்ட மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8 000 பில்லியன் ரூபாவாகவும் இருப்பின், பின்வருவனவற்றுள் எக் கொள்கைகளின் கலப்பு இப்பொருளாதாரத்தை இந்நிலையை நோக்கி நகர்த்தி இருக்கக்கூடும்?

(1) வரிகளில் ஒரு வீழ்ச்சியும் கொள்கை வட்டி வீதங்களில் ஓர் அதிகரிப்பும்.
(2) வரிகளில் ஒரு வீழ்ச்சியும் வட்டி வீதங்களில் ஒரு வீழ்ச்சியும்
(3) வரிகளில் ஒரு வீழ்ச்சியும் திறந்த சந்தை நடவடிக்கையில் அரச பிணையங்களை விற்பனை செய்தலும்.
(4) அரச கொள்வனவுகளில் ஓர் அதிகரிப்பும் நியதி ஒதுக்குத் தேவையில் ஓர் அதிகரிப்பும்.
(5) வரிகளில் ஒரு வீழ்ச்சியும் அரசாங்கக் கொள்வனவுகளில் ஒரு வீழ்ச்சியும்.

**26.** நீர் உமது வங்கி நடைமுறைக்கணக்கிலிருந்து பணத்தை மீளப் பெற்று அப்பணத்தை உமது கட்டில் மெத்தைக்குக் கீழ் வைத்துக் கொள்வீராயின், அது $M_1$ மற்றும் $M_2$ ஆகிய பணக் கூட்டுக்களை எவ்வாறு பாதிக்கும்?

(1) $M_1$ அதிகரிப்பதுடன் $M_2$ வீழ்ச்சியடையும்.
(2) $M_2$ அதிகரிப்பதுடன் $M_1$ வீழ்ச்சியடையும்.
(3) $M_1$, $M_2$ ஆகிய இரண்டையும் அது பாதிக்காது.
(4) $M_1$, $M_2$ ஆகிய இரண்டும் வீழ்ச்சியடையும்.
(5) $M_1$, $M_2$ ஆகிய இரண்டும் அதிகரிக்கும்.

**27.** பணத்தின் தொகைக் கோட்பாட்டின் எடுகோள்களின்படி பணநிரம்பல் 10% இனால் அதிகரிக்கும் எனின், அதனால்

(1) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 10% இனால் அதிகரிக்கும். அத்துடன் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி மாறாதிருக்கும்.
(2) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியும் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் 10% இனால் அதிகரிக்கும்.
(3) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி மாறாதிருக்கும் ஆனால் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 10% இனால் அதிகரிக்கும்.
(4) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி மாறாதிருக்கும் ஆனால் விலை மட்டம் 10% இனால் அதிகரிக்கும்.
(5) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியோ மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியோ மாற்றமடையாது.

**28.** பின்வருவனவற்றுள் கேள்வித் தூண்டல் பணவீக்கத்திற்குக் காரணமாவது எது?

(1) நேர்வரிகளில் ஏற்படும் அதிகரிப்பு
(2) நேரில் வரிகளில் ஏற்படும் அதிகரிப்பு
(3) உலக சந்தையில் எண்ணெய் விலையில் ஏற்படும் ஒரு சடுதியான அதிகரிப்பு
(4) அரசாங்கத்தின் பொருள்கள் சேவைகள் கொள்வனவில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) மத்திய வங்கி அரச பிணையங்களைக் கொள்வனவு செய்தல்

[பக். 6 ஐப் பார்க்க

**29.** தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்கு வீதத்தைப் பேணும் ஒரு வணிக வங்கியிலுள்ள நடைமுறைக் கணக்கில் ஒரு நபர் 5 000 ரூபாவை வைப்பிலிடுவாராயின் அதன் உடனடி விளைவாக ஏற்படுவது,
(1) பண நிரம்பலில் 5 000 ரூபா அளவினால் ஏற்படும் ஒரு வீழ்ச்சியாகும்.
(2) பண நிரம்பலில் 5 000 ரூபா அளவினால் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.
(3) பண நிரம்பலில் மாற்றமில்லை ஆனால் வங்கியில் தற்போது மிகை ஒதுக்குகள் இருப்பதனால் எதிர்காலத்தில் பண நிரம்பல் விரிவடையலாம்.
(4) பண நிரம்பலில் 5 000 ரூபாவினால் ஓர் அதிகரிப்பு ஏற்படும் ஆனால் வங்கியில் தற்போது மிகை ஒதுக்குகள் இருப்பதனால் எதிர்காலத்தில் பண நிரம்பல் மேலும் விரிவடையலாம்.
(5) இந்நபர் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்த தொகைக்கு சமமான அளவினால் மிகை ஒதுக்குகளில் ஒரு வீழ்ச்சி ஏற்படும்.

**30.** விரிவாக்கப் பணக்கொள்கையானது, கழிவீட்டு வீதம், கொள்கை வட்டி வீதம் மற்றும் மொத்தக் கேள்வி பற்றிய பின்வருவனவற்றுள் எதன் மூலம் வெளிப்படுத்தப்படும்?

| | கழிவீட்டு வீதம் | கொள்கை வட்டி வீதம் | மொத்தக் கேள்வி |
|---|---|---|---|
| (1) | வீழ்ச்சி | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (2) | அதிகரிப்பு | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (3) | அதிகரிப்பு | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (4) | வீழ்ச்சி | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (5) | அதிகரிப்பு | அதிகரிப்பு | அதிகரிப்பு |

**31.** பின்வருவனவற்றுள் உலக பொதுப்பொருள் **அல்லாதது** எது?
(1) உலக மரபுரிமைத் தலங்கள்
(2) விண்வெளி
(3) சைபர் பாதுகாப்பு
(4) சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும்
(5) தேசிய பாதுகாப்பு

**32.** பின்வரும் தெரிவுகளுள் மேன்மைப் பொருள்களை பொதுப் பொருள்களிலிருந்து வேறுபடுத்துவது எது?

| | மேன்மைப் பொருள்கள் | பொதுப் பொருள்கள் |
|---|---|---|
| (1) | ஒருவரது நுகர்வு ஏனையோருக்கு கிடைக்கும் அளவைக் குறைக்கும். | ஒருவரது நுகர்வு ஏனையோருக்கு கிடைக்கும் அளவைக் குறைக்காது. |
| (2) | சந்தை விலையில் வழங்கப்படும். | செலவை ஈடுசெய்யும் விலையில் வழங்கப்படும். |
| (3) | நிரம்பல் வரையறுக்கப்பட்டது. | எல்லையற்ற நிரம்பல் காணப்படும். |
| (4) | நேர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்கும். | எதிர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்கும். |
| (5) | அரசாங்கத்தால் வழங்கப்படும். | தனியார் கம்பனிகளால் வழங்கப்படும். |

**33.** சந்தைத் தோல்வி ஏற்படுவது
(1) சில நிறுவனங்கள் தமது உற்பத்திகளுக்கு ஒரு சந்தையைப் பெறமுடியாத போதாகும்.
(2) சந்தைகள் வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்யாத போதாகும்.
(3) சந்தைகள் மேன்மைப் பொருள்களை வழங்காத போதாகும்.
(4) கேள்வியானது நிரம்பலை விஞ்சுவதால் விலை அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும் போதாகும்.
(5) பொருள்கள், சேவைகள் மீது அரசாங்கம் விலைக் கட்டுப்பாடுகளை விதிக்கும் போதாகும்.

**34.** வரியியலில் குத்து நிலைச் சமத்துவம் நிலைநிறுத்துவது,
(1) வரி செலுத்த சமமான இயலுமை கொண்டவர்கள் சமமான வரிச் சுமையைத் தாங்க வேண்டும் என்பதாகும்.
(2) அரசாங்க சேவைகளில் இருந்து அதிக பயன் பெறுபவர்கள் அதிக வரிச் சுமையைத் தாங்க வேண்டும் என்பதாகும்.
(3) வரி செலுத்த அதிக இயலுமை கொண்டவர்கள் அதிக வரிச்சுமையைத் தாங்க வேண்டும் என்பதாகும்.
(4) வரி செலுத்த சமமான இயலுமை கொண்டவர்கள் வரிச்சுமையை சமமற்ற விதத்தில் தாங்க வேண்டும் என்பதாகும்.
(5) வருமானம் உழைக்கும் சகலரும் தமது வருமானத்தில் சமமான சதவீதத்தை வரியாகச் செலுத்த வேண்டும் என்பதாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**35.** அரசாங்க மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் (Gross Financing Needs) எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது?

(1) மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் = மொத்த அரசிறை வருவாய்களும் கொடைகளும் – வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக மீண்டெழும் செலவினம் – மூலதனச் செலவினம்

(2) மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் = மொத்த அரசிறை வருவாய்களும் கொடைகளும் – மொத்த அரச செலவினங்கள் + கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

(3) மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் = மொத்த அரசிறை வருவாய்களும் கொடைகளும் – (மீண்டெழும் செலவினம் + மூலதனச் செலவினம் + வட்டிக் கொடுப்பனவுகள்)

(4) மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் = மொத்த அரசிறை வருவாய்களும் கொடைகளும் – (மொத்த அரச செலவினம் – தேறிய கடன் கொடுப்பனவுகள்)

(5) மொத்த நிதியிடல் தேவைப்பாடுகள் = மொத்த அரசிறை வருவாய்களும் கொடைகளும் – (மீண்டெழும் செலவினம் + கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்)

**36.** சர்வதேச வர்த்தகம் தொடர்பில் குவித்தல் என்பது

(1) பல்தேசியக் கம்பனிகள் விலை வேறாக்கத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு முறையாகும்.

(2) பொருள்கள் உள்நாட்டுச் சந்தையில் விற்கப்படும் விலையை விடக் குறைவான விலைகளில் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்கப்படும் நடைமுறையாகும்.

(3) ஒரு இறக்குமதி கோட்டாவில் அனுமதிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாகப் பொருள்களை விற்கும் ஒரு முறையாகும்.

(4) வர்த்தகக் குறைநிலையை சீர்படுத்த ஒரு நாடு கைக்கொள்ளும் ஓர் உபாயமாகும்.

(5) குறித்த ஒரு நாட்டிலிருந்தான இறக்குமதிகளை முற்றாகத் தடைசெய்வதாகும்.

**37.** இலங்கையின் ஏற்றுமதிகளின் பிரதான கொள்வனவாளர்

(1) ஐக்கிய அமெரிக்கா ஆகும்.
(2) ஐரோப்பிய ஒன்றியம் ஆகும்.
(3) ஐக்கிய இராச்சியம் ஆகும்.
(4) சீனா ஆகும்.
(5) இந்தியா ஆகும்.

**38.** கறுவா மற்றும் வெங்காய உற்பத்தியில் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் ஓரலகு ஊழிய உள்ளீட்டிற்கான வெளியீட்டளவுகளை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| பொருள் | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| கறுவா | 10 | 20 |
| வெங்காயம் | 30 | 100 |

பரஸ்பர நன்மை பெறும் வர்த்தகம் இடம்பெற வேண்டுமாயின் இலங்கை எந்த பரிமாற்ற வீதத்தில் இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய விரும்பும்?

(1) ஓர் அலகு கறுவாவுக்கு 2 அலகுகளுக்குக் குறைவான அளவு வெங்காயம்.
(2) ஓர் அலகு கறுவாவுக்கு 3 அலகுகளுக்குக் குறைவான அளவு வெங்காயம்.
(3) ஓர் அலகு கறுவாவுக்கு 5 அலகுகளுக்கு மேற்பட்ட அளவு வெங்காயம்.
(4) ஓர் அலகு கறுவாவுக்கு 3 அலகுகளுக்கும் 5 அலகுகளுக்கும் இடைப்பட்ட அளவு வெங்காயம்.
(5) ஓர் அலகு கறுவாவுக்கு 2 அலகுகளுக்கும் 4 அலகுகளுக்கும் இடைப்பட்ட அளவு வெங்காயம்.

**39.** சேவைகளிலான வர்த்தகம் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கின் ஒரு கூறாகும். பின்வருவனவற்றுள் சேவைகளிலான வர்த்தகத்திற்கு ஒரு உதாரணமாக அமைவது எது?

(1) வெளிநாடுகளுக்கான அபிவிருத்தி உதவி
(2) முதனிலைப் பொருள்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள்
(3) வெளிநாடுகளிலிருந்தான தொழிலாளர்களின் பணவனுப்பல்கள்
(4) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பெறப்படும் வருவாய்கள்
(5) சொத்துப் பட்டியல் முதலீடுகளுக்கான கூப்பன் செலுத்தல்கள்

**40.** இலங்கைக்கு உள்வரும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மிகப்பெரிய சதவீதம் கிடைக்கப்பெறும் மூலாதாரம்

(1) ஐரோப்பிய ஒன்றியம் ஆகும்.
(2) மத்திய கிழக்கு ஆகும்.
(3) வட அமெரிக்கா ஆகும்.
(4) தெற்கு ஆசியா ஆகும்.
(5) தென் கிழக்கு ஆசியா ஆகும்.

[பக். 8 ஐப் பார்க்க

**41.** ஒரு நாட்டு நாணயத்தின் பெறுமதி அதிகரிப்பு (appreciation) அதன் வர்த்தக நிலுவையில் மிகை நிலையை ஏற்படுத்தவல்லது,

(1) ஏற்றுமதிகளினதும், இறக்குமதிகளினதும் கேள்வி நெகிழ்ச்சிக் குணகங்களின் கூட்டுத்தொகை 1 ஐ விடக் குறைவாக இருக்கும் போதாகும்.
(2) வர்த்தக மாற்று விகிதம் மிகச் சாதகமாக உள்ளதுடன் ஏற்றுமதிகளின் கேள்வி அதிக விலை நெகிழ்ச்சியுள்ள போதாகும்.
(3) நாடு கைத்தொழிலில் பொருள்களை ஏற்றுமதி செய்யும் அதேவேளை மூலப்பொருள்களை இறக்குமதி செய்யும் போதாகும்.
(4) ஏற்றுமதிகளினதும், இறக்குமதிகளினதும் கேள்வி நெகிழ்வுள்ளதாக அமையும் போதாகும்.
(5) இறக்குமதி அளவுடன் ஒப்பிடும்போது ஏற்றுமதி அளவு பெரிதாக இருக்கும் போதாகும்.

**42.** பின்வரும் அட்டவணை கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தின் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மற்றும் நிதிக் கணக்குகள் தொடர்பான சில தரவுகளைக் காட்டுகின்றது.

| வகை | பெறுமதி (பில்லியன் ரூபா) | வகை | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|---|---|
| நிதியியல் பெறுதிகள் | 25 | பொருள் சேவைக் கணக்கு நிலுவை | – 160 |
| தேறிய முதலாந்தர வருமானம் | – 40 | தேறிய இரண்டாம் நிலை வருமானங்கள் | 20 |
| நேரடி முதலீடுகள் | 60 | சொத்துப் பட்டியல் முதலீடுகள் | 50 |
| ஒதுக்குச் சொத்துகள் | 15 | மூலதனக் கணக்கு நிலுவை | ? |

இப்பொருளாதாரத்தின் மூலதனக் கணக்கு நிலுவை யாது?

(1) 30 பில்லியன் ரூபா மிகை நிலை.
(2) 30 பில்லியன் ரூபா குறை நிலை.
(3) 150 பில்லியன் ரூபா குறை நிலை.
(4) 150 பில்லியன் ரூபா மிகை நிலை.
(5) 180 பில்லியன் ரூபா குறை நிலை.

**43.** பல்வேறு அரசாங்கங்கள் பேண்தகு பொருளாதார வளர்ச்சியை ஒரு பேரினப் பொருளாதாரக் கொள்கை இலக்காக ஏற்றுக் கொண்டுள்ளன. பேண்தகு பொருளாதார வளர்ச்சி என்பதனால் கருதப்படுவது என்ன?

(1) பொருளாதாரத்தின் நிகழ்கால உற்பத்தி சாத்தியத்தை இயன்றளவு துரிதமாக அதிகரித்தல்.
(2) பொருளாதாரத்தின் நிகழ்கால உற்பத்தி சாத்தியத்தை குறைந்த செலவு கொண்ட வளங்களை மாத்திரம் பயன்படுத்தி அதிகரித்தல்.
(3) எதிர்கால உற்பத்தி சாத்தியம் குறைவடையாத வகையில் பொருளாதாரத்தின் நிகழ்கால உற்பத்தி சாத்தியத்தை அதிகரித்தல்.
(4) பொருளாதாரத்தின் எதிர்கால உற்பத்தி சாத்தியத்தை இயன்றளவு துரிதமாக அதிகரித்தல்.
(5) பொருளாதாரம் இயற்கை வளங்களில் தங்கியிருக்கும் தன்மையை இழிவுபடுத்த நிகழ்கால உற்பத்திச் சாத்தியத்தை அதிகரித்தல்.

**44.** பல்வேறு நாடுகளின் அபிவிருத்தி மட்டங்களை கணிப்பிட்டு ஒப்பீடு செய்யும் நோக்கில் மனித அபிவிருத்தி சுட்டெண்ணை (HDI) வெளியீடு செய்யும் சர்வதேச நிறுவனம் எது?

(1) உலக வங்கி
(2) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
(3) ஆசிய அபிவிருத்தி வங்கி
(4) சர்வதேச நாணய நிதியம்
(5) உலக வர்த்தக நிறுவனம்

**45.** உலக வங்கியானது குறைந்த வருமானம் பெறும் நாடுகளுக்காகத் தற்போது பயன்படுத்தும் சர்வதேச வறுமைக் கோடு

(1) $ 1.00 ஆகும்.
(2) $ 1.75 ஆகும்.
(3) $ 2.15 ஆகும்.
(4) $ 3.65 ஆகும்.
(5) $ 6.85 ஆகும்.

[பக். 9 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**46.** கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தின் தொழிற்படை தொடர்பான சில தரவுகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆண்டு | தொழிற்படை (மில்லியன்) | தொழிலற்றோர் (மில்லியன்) | தொழில் புரியும் வயது சனத்தொகை (மில்லியன்) |
|---|---|---|---|
| ஆண்டு 1 | 15 | 3 | 25 |
| ஆண்டு 2 | 20 | 4 | 30 |

மேலுள்ள தரவுகளின்படி ஆண்டு 1 இலிருந்து ஆண்டு 2 வரையில் இந்நாட்டின் தொழில் புரிவோர் சதவீதத்திலும் தொழிற்படையின் பங்குபற்றல் வீதத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை பின்வருவனவற்றுள் எது சிறப்பாக விபரிக்கின்றது?

| | தொழில் புரிவோர் சதவீதம் | தொழிற்படையின் பங்குபற்றல் வீதம் |
|---|---|---|
| (1) | வீழ்ச்சிடைந்தது | அதிகரித்தது |
| (2) | அதிகரித்தது | மாற்றமேற்படவில்லை |
| (3) | மாற்றமேற்படவில்லை | அதிகரித்தது |
| (4) | அதிகரித்தது | அதிகரித்தது |
| (5) | மாற்றமேற்படவில்லை | வீழ்ச்சிடைந்தது |

**47.** கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தில் கிணி குணகமானது 0.35 இலிருந்து 0.42 ஆக மாற்றமடைவதாகக் கொள்க. பின்வருவனவற்றுள் எதில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் இதனை ஏற்படுத்தியிருக்கலாம்?

(1) அத்தியாவசிய நுகர்வுப் பொருள்கள் மீதான பெறுமதி சேர் வரி
(2) வருமான வரி செலுத்துவோரின் வரியற்ற வருமான வரையறை
(3) தொழிலற்றோருக்கான மாற்றல் செலுத்தல்கள்
(4) பயிற்சிக்காக வணிக நிறுவனங்களின் செலவீடு
(5) சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் மீதான அரசாங்க செலவீடு

**48.** பின்வருவனவற்றுள் சமுர்த்தி திட்டத்தின் முதன்மைக் குறிக்கோள்களை சிறப்பாக விபரிப்பது எது?

(1) கிராமப் புறங்களிலும் பெருந்தோட்டங்களிலும் நிலவும் வேலையின்மையைக் குறைத்தல்.
(2) வறுமையையும் வருமானச் சமமின்மையையும் குறைத்தல்.
(3) நகர்ப்புறத் துறையில் சிறிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.
(4) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள சிறுவர்களின் உயர்கல்விக்கு உதவுதல்.
(5) பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்.

**49.** பாரிஸ் குழு (Paris Club) கடன் மீள்கட்டமைப்பின்போது முதன்மையாகக் கருத்திற்கொள்வது

(1) வணிக வங்கிகள் உள்ளடங்கலாக தனியார் கடன் வழங்குநர்கள் வசமுள்ள நடுத்தரகால மற்றும் நீண்டகால பொதுப்படுகடனையாகும்.
(2) அபிவிருத்தி அடைந்த நாடுகளிடமிருந்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெற்றுள்ள நடுத்தரகால மற்றும் நீண்டகால பொதுப்படுகடனையாகும்.
(3) ஒரு அங்கத்துவ நாட்டினால் ஓர் இறைமைக் கடன் பெறுபவருக்கு வழங்கப்பட்டுள்ள நடுத்தரகால மற்றும் நீண்டகால பொதுப்படுகடனையாகும்.
(4) குறுகியகால முதிர்வுடைய பொதுப்படுகடனையாகும்.
(5) பல்பக்க கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள பொதுப்படுகடனையாகும்.

**50.** இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய விரிவாக்கப்பட்ட நிதி வசதி வழங்கலின் கீழ் மறுசீரமைப்புக்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மூன்று பிரதான அரசதுறை தொழில் முயற்சிகள் யாவை?

(1) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா சதொச, ஸ்ரீலங்கா டெலிகொம்
(2) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் எயார்லைன்
(3) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மில்கோ தனியார் நிறுவனம், இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம்
(4) லங்கா பொஸ்பேற் லிமிடட் நிறுவனம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை
(5) இலங்கை மின்சார சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கைப் போக்குவரத்துச் சபை

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| ආර්ථික විද්‍යාව | II |
| பொருளியல் | II |
| Economics | II |

**21 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ உப பகுதி 'அ' இலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையும் உப பகுதி 'ஆ' இலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ வரைபுத்தாள் வழங்கப்படும்.

## உப பகுதி 'அ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**1.** (i) ஒரு பொருளாதாரத்தில் வள ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினைகள் எழுவது ஏன்? (03 புள்ளிகள்)

(ii) மீள்புதுப்பிக்கத்தக்க வளங்கள் என்பதனால் கருதப்படுவது என்ன? இவ்வாறான வளங்களுக்கு ஓர் உதாரணம் தருக. (03 புள்ளிகள்)

(iii) உற்பத்திச் செயன்முறையில் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்கு தொழிற்பிரிப்பு எவ்வாறு பங்களிக்கும்? (04 புள்ளிகள்)

(iv) ஒரு கட்டளைப் பொருளாதாரத்தின் **நான்கு** பிரதான குறைபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) "ஒரு பொருளாதாரமானது உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது தான் இருக்கும் இடம் குறித்து நிகழ்காலத்தில் மேற்கொள்ளும் தெரிவானது பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் ஒரு பிரதான காரணியாகும்." வரைபடங்களைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) ஒரு சாதாரண பொருள், ஒரு இழிவுப் பொருள், ஒரு கிபன் பொருள் என்பவற்றை வேறுபடுத்துக. (03 புள்ளிகள்)

(ii) ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் விலையின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) ஒரு நிரம்பல் வளையி நேர்க்கணிய சாய்வுடையதாக இருப்பதற்கான **இரு** காரணங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஒரு நேர்கோட்டு கேள்வி வளையி அதன் உயர் விலை வீச்சினுள் அதிக விலை நெகிழ்வுள்ளதாகவும் குறைவான விலை வீச்சினுள் அதிக விலை நெகிழ்வற்றதாகவும் இருப்பது ஏன்? (04 புள்ளிகள்)

(v) (அ) ஒரு விலை மாற்றத்தின் வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ஆ) அவை கேள்வி விதியுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன? (04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**3.** (i) எத்தகைய சூழ்நிலையில் ஒரு பொருளின் மீதான அலகு வரியானது சந்தை விலை மற்றும் கொள்வனவு செய்யப்படும் தொகை ஆகிய இரண்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தாதிருக்கும்? உமது விடையை ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையானவையா? பொய்யானவையா?** என விளக்குக.

(அ) நுகர்வோன் மிகையானது வரைபட ரீதியில் கேள்வி வளையிக்கு கீழும் நிரம்பல் வளையிக்கு மேலும் உள்ள பிரதேசத்தினால் காட்டப்படும்.

(ஆ) நிரம்பலில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி காரணமாக சந்தை விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு நுகர்வோன் மிகையை அதிகரிக்கும்.

(இ) கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி காரணமாக ஒரு பொருளின் சந்தை விலை வீழ்ச்சியடையுமாயின் மேலதிக உற்பத்தியாளன் மிகை உருவாக்கப்படும்.

(02 × 03 = 06 புள்ளிகள்)

(iii) நெல்லுக்கான சந்தைக் கேள்வி வளையி $Q_D = 120 - 0.5P$ ஆகவும் நெல்லுக்கான சந்தை நிரம்பல் வளையி $Q_S = -30 + P$ ஆகவும் இருப்பதாகக் கொள்க. (தொகை மில்லியன் அலகுகளில் தரப்பட்டுள்ளன.)

(அ) சந்தைச் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) ஒரு கிலோகிராமுக்கு ரூபா 120 குறைந்தபட்ச விலையை நிர்ணயித்து ஒரு 'விலை உதவித்திட்டத்தை' நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானிப்பதாகக் கொள்க. இச்சந்தையில் நிலவும் மிகை நிரம்பல் யாது? (02 புள்ளிகள்)

(இ) இத்திட்டத்தினால் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவு யாது? (02 புள்ளிகள்)

(ஈ) இவ்விலை உதவித் திட்டத்தின் காரணமாக ஏற்படும் மீளமுடியாத இழப்பின் (dead-weight loss) அளவினைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

**4.** (i) கணக்கியல் இலாபத்திற்கும் பொருளியல் இலாபத்திற்கும் இடையிலான வேறுபாடு யாது? (04 புள்ளிகள்)

(ii) சிலருரிமைச் சந்தையின் **நான்கு** பிரதான பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஒரு நிறைபோட்டிச் சந்தையில் உற்பத்தி நிறுவனம் ஒன்று விலையை ஏற்பவராக இருப்பதுடன், தனது உற்பத்திகள் விற்கப்படும் விலையைத் தெரிவுசெய்ய முடியாதிருப்பது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) கரட்டுக்கான சந்தை நிறைபோட்டித் தன்மை வாய்ந்ததெனக் கொள்க. ஒரு கிலோகிராமின் சந்தை விலை ரூபா 200 ஆகும். சரத் என்ற கரட் பயிரிடும் விவசாயி ஒரு வாரத்தில் 50 கிலோகிராம் கரட்டை விற்பனை செய்கின்றார். ஒரு கிலோகிராமிற்கான அவரது எல்லைச் செலவு ரூபா 150 ஆகும்.

(அ) வாரம் ஒன்றிற்கான சரத்தின் மொத்த வருவாயையும் எல்லை வருவாயையும் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சரத் இலாபத்தை உச்சப்படுத்துகின்றாரா? உமது விடையை விளக்குக. (02 புள்ளிகள்)

(இ) கரட் கிலோகிராம் ஒன்றின் சந்தை விலை ரூபா 100 ஆக வீழ்ச்சியடைவதுடன், சரத் தனது வெளியீட்டினை வாரமொன்றிற்கு 30 கிலோகிராம்களாகக் குறைக்கின்றார். கிலோகிராம் ஒன்றிற்கான அவரது சராசரி மாறுஞ் செலவு 80 ரூபாவாகவும் எல்லைச் செலவு 100 ரூபாவாகவும் குறைவடைகின்றன. அவரது சராசரி நிலையான செலவு கிலோகிராம் ஒன்றிற்கு 40 ரூபாவாக அதிகரிக்கின்றது. அவர் இலாபத்தை உச்சப்படுத்துகின்றாரா? அவர் ஒரு பொருளியல் இலாபத்தை உழைக்கின்றாரா? அல்லது நட்டத்தை அனுபவிக்கின்றாரா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

**5.** (i) பின்வரும் நிகழ்வுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியை எவ்வாறு பாதிக்கும்? விளக்குக.

(அ) பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தமது சம்பளங்களில் ஒரு குறைப்பை ஏற்படுத்த வாக்களிக்கின்றனர்.

(ஆ) ஒரு வீட்டுத் தொகுதியை நிர்மாணிக்கும் நோக்கில் ஒரு முதலீட்டாளர் ஒரு நிலத்துண்டினைக் கொள்வனவு செய்கின்றார்.

(இ) ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவர் தனது ஓய்வூதியக் கொடுப்பனவில் 2500 ரூபா அதிகரிப்பை பெறுகின்றார்.

(ஈ) நிறுவனங்கள் தமது கையிருப்புக்களை (inventories) அதிகரிக்கின்றன. (04 புள்ளிகள்)

(ii) மொத்த உள்நாட்டு வருமானக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படவேண்டிய முதன்மை வருமானத்தின் பிரதான மூலாதாரங்கள் யாவை? (04 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



(iii) அரசாங்கம் தனது மாற்றல் செலுத்தல்களை 100 பில்லியன் ரூபாவினால் அதிகரித்து அதேயளவினால் தன்னிச்சையான வரிகளையும் அதிகரிப்பதாகக் கொள்க. இம்மாற்றத்தினால் பொருளாதாரத்தின் மீது ஏற்படும் தேறிய விளைவு யாது? உமது விடையை விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) ஒரு கருதுகோள் பொருளாதாரத்தின் பின்வரும் பேரினப் பொருளாதார மாதிரியைக் கருதுக.

நுகர்வு (C) $= 420 + 0.8Y_D$
மாற்றல் செலுத்தல்கள் (Tr.) $= 200$
தன்னிச்சையான வரிகள் (T) $= 250$
முதலீடு (I) $= 160$
அரசாங்கக் கொள்வனவுகள் (G) $= 100$
தேறிய ஏற்றுமதிகள் (NX) $= -40$
(பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலை தேசிய வருமான மட்டம் யாது? (04 புள்ளிகள்)
(ஆ) செலவிடத்தக்க தேசிய வருமானத்தையும் மொத்த சேமிப்பையும் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)
(இ) சமநிலை தேசிய வருமானம் 4000 பில்லியன் ரூபாவாக மாற்றமடைய வேண்டுமாயின் முதலீடு எந்தளவினால் மாற்றமடைய வேண்டும்? (04 புள்ளிகள்)

## உப பகுதி - 'ஆ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**6.** (i) மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியையும் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பணவீக்கத்தின் செலவுகள் எவை? (04 புள்ளிகள்)

(iii) (அ) 'உயர்வலுப் பணம்' என்பதனால் கருதப்படுவது என்ன? (02 புள்ளிகள்)
(ஆ) பொருளாதாரத்தின் உயர்வலுப் பண இருப்பை நிர்ணயிக்கும் **இரு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) ஒரு வணிக வங்கியின் எளிமைப்படுத்தப்பட்ட ஐந்தொகை பின்வருமாறு தரப்படுகின்றது.

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| கேள்வி வைப்புகள் | 2000 | ஒதுக்குகள் | 500 |
| மூலதனம் | 1300 | கடன்கள் | 1600 |
| | | கட்டடங்கள் | 1200 |
| **மொத்தம்** | 3300 | **மொத்தம்** | 3300 |

(இலக்கங்கள் மில்லியன் ரூபாவில்)

தேவைப்பாடுடைய ஒதுக்கு வீதம் 10% ஆயின், இவ்வங்கியின் மிகை ஒதுக்குகளின் அளவு யாது? (02 புள்ளிகள்)

(v) சுருக்கப் பணக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கி பயன்படுத்தவல்ல **மூன்று** பிரதான கருவிகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

**7.** (i) வள ஒதுக்கீட்டில் வெளிவாரி நன்மைகளினதும் வெளிவாரி செலவுகளினதும் விளைவுகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) மேன்மைப் பொருட்களுக்கு **இரு** உதாரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) அரசாங்கத்தின் தலையீடு இல்லாத சந்தர்ப்பங்களில் மேன்மைப் பொருள்கள் ஏன் பெரும்பாலும் குறை நுகர்வுக்கு உட்படுகின்றன என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) 'வரியின் மிகைச்சுமை' என்பதால் கருதப்படுவது என்ன? (02 புள்ளிகள்)

(iv) இலங்கையில் அரசாங்க வருவாயின் குறைந்துசெல்லும் போக்கினை மீள்திருப்ப அரசாங்கத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட **நான்கு** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) ஒரு நாட்டின் பொதுப்படுகடனின் நிலைபேற்றுத் தன்மையை நிர்ணயிப்பதில் ஆரம்பக் கணக்கு மீதி மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஏன்? (06 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

**8.** (i) வெளிநாட்டு வர்த்தகத்தில் 'முழு நன்மை' மற்றும் 'ஒப்பீட்டு நன்மை' ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) சர்வதேச வர்த்தகத்தில் பாதுகாப்பு வாதத்திற்கு ஆதரவானதும் எதிரானதுமான **இவ்விரண்டு** வாதங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் வர்த்தக நிலுவையானது நாணய மாற்று வீத மாற்றங்களால் எவ்வாறு பாதிக்கப்படும்? (04 புள்ளிகள்)

(iv) ஒரு நாட்டின் பண்ட வர்த்தக மாற்று விகிதம் மேம்பாடு அடைவதன் முக்கியத்துவம் யாது? (03 புள்ளிகள்)

(v) அண்மைய ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் சடுதியான தேய்வுக்கு இட்டுச்சென்ற **ஐந்து** காரணிகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

**9.** (i) பல்பரிமாண வறுமைக் குறிகாட்டியானது மூன்று பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இம் **மூன்று** பரிமாணங்களும் யாவை? (03 புள்ளிகள்)

(ii) உலக வங்கியானது ஐக்கிய அமெரிக்க டொலர்களில் கணிப்பிடப்படும் தலைக்குரிய மொத்த தேசிய வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளை நான்கு வகுதிகளாகப் பிரித்துள்ளது. அந் **நான்கு** வகுதிகளும் யாவை? (04 புள்ளிகள்)

(iii) பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில் தொழினுட்ப முன்னேற்றத்தின் பணியை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) கட்டமைப்பு வேலையின்மையையும் சகடோட்ட வேலையின்மையையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(v) தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் **ஐந்து** பிரதான சமூக வலைப்பின்னல் திட்டங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

**10.** (i) (அ) 'உணவுப் பாதுகாப்பு' என்னும் எண்ணக்கருவினால் கருதப்படுவது என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) தற்போது இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மையில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) அண்மைக்காலத்தில் இலங்கையில் இருந்து இளைஞர்களும் நடுத்தர வர்க்க தொழில் வாண்மையாளர்களும் குடிபெயர்ந்து செல்வதன் பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பேண்தகு அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் சுற்றாடல் பாதிப்புகளை குறைப்பதற்கும் 'சுற்றோட்டப் பொருளாதாரம்' என்னும் எண்ணக்கரு எவ்வாறு பங்களிப்புச் செய்யும்? (05 புள்ளிகள்)

(iv) கடன் மீள்கட்டமைப்புச் செயன்முறையூடாக பொதுப்படுகடனின் நிலைபேறுடைய தன்மையை அடைய சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை இலங்கைக்கு விதித்துள்ள பிரதானமான அளவுசார் இலக்குகள் யாவை? (06 புள்ளிகள்)

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

# 25% OFF ALL BOOKS

Including Exercise Books, CR Books, and B5 Books



ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**

# ORDER A/L TERM TEST PAPERS, SHORT NOTES, WORKBOOKS & REVISION BOOKS

SINHALA, ENGLISH & TAMIL MEDIUM



# LOL BOOK STORE

CASH ON DELIVERY AND KOKO PAYMENT AVAILABLE

0717774440 (WHATSAPP)

WWW.LOL.LK